**செ. கு. எண்:174** **நாள்: 07.11.2017**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 7.11.2017

சிறந்த தமிழறிஞரும், எழுத்தாளருமான திரு.மா. நன்னன் இன்று (7.11.2017) உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துயரம் அடைந்தேன்.

தொடக்கப் பள்ளி ஆசிரியராகத் தனது தமிழ்ப் பணியைத் தொடங்கிய திரு.நன்னன் அவர்கள், முனைவர் பட்டம் பெற்று, கலைக் கல்லூரி, மாநிலக் கல்லூரி உள்ளிட்ட பல கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றினார். மேலும், திரு.நன்னன் அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராக பணியாற்றியதோடு, எழுத்தறிவித்தலில் 'நன்னன் முறை' என்ற புதிய முறையை உருவாக்கிய பெருமைக்குரியவர் ஆவார்.

திரு. நன்னன் அவர்கள், 'தவறின்றி தமிழ் எழுதுவோம்', 'எல்லார்க்கும் தமிழ்' உள்ளிட்ட 70–க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். தனது எழுத்துப் பணிக்காக பெரியார் விருது, தமிழ்ச் செம்மல் விருது, திரு.வி.க. விருது போன்ற விருதுகளையும் திரு. நன்னன் அவர்கள் பெற்றுள்ளார்.

தமிழ் மொழி மேல் நீங்கா பற்றுக் கொண்டவரும், அனைவரிடமும் அன்பாக பழகக்கூடிய பண்பாளருமான திரு. நன்னன் அவர்களின் மறைவு தமிழ் இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகும்.

திரு. நன்னன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தமிழ் இலக்கியத்துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**